Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 359

புதன்கிழமை
20 நவம்பர் 2024

கார்த்திகை 05
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இனி திசைகாட்டியின்ர முள்ளு சீனாப்பக்கம் தான் காட்டும் கண்டியளோ"

## இடதுசாரி அரசாங்கமென இலங்கையை பார்க்கோம்

### வெளிவிவகாரக் கொள்கை மாறாது நீண்ட விவாதத்துக்கு சீனா முற்றுப்புள்ளி

யாழ்ப்பாணம், நவ. 20
இலங்கையில் இடதுசாரி அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதா? அல்லது அவர்களின் அரசியல் கொள்கைகள் என்ன என்று நாம் பார்ப்பதில்லை. இலங்கை எமது நட்பு நாடு. அதுவொன்றுதான் எங்களின் கொள்கை என்று யாழ்ப்பாணத்தில் 11




## பிரிக்கப்படாத இலங்கையை சீனா எப்போதும் ஆதரிக்கும்

### யாழ்ப்பாணத்தில் வைத்து சீனத் தூதுவர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவம்பர் 20**

**பிரிக்கப்படாத - ஒன்றுபட்ட இலங்கைக்குள், அனைத்து மக்களும் இலங்கையர்களாக வாழ்வதை சீனா எப்போதும் ஆதரிக்கும் என்று சீனத் தூதுவர் ஷி ஷென்கொங் தெரிவித்துள்ளார்.** 11

## இந்தியா - இலங்கை உறவு வலுவாகட்டும்!

### சீனத்தூதுவரின் விருப்பம்

யாழ்ப்பாணம், நவ. 20
இந்தியா - இலங்கை இடையிலான உறவு வலுப்பெற வேண்டும் என்று யாழ்ப்பாணத்துக்கு நேற்று மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போது சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தியா, இலங்கையின் மிக நெருக்கமான அயல் நாடு என்ற வகையில், இந்த இரண்டு 11

### சீனக் கல்வித்திட்டங்களுக்கு

## யாழ். பல்கலைக்கழகம் ஒத்துழைப்பதில்லையாம்

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் கல்வித்துறை ரீதியிலான செயற்றிட்டங்களை மேற்கொள்ள முயற்சிக்கும் போது, பல்கலைக்கழகப் பிரதிநிதிகளிடம் இருந்து எமக்குப் போதிய ஒத்துழைப்புகள் கிடைப்பதில்லை என்று சீனத்தூதுவர் குற்றஞ்சாட்டியுள்ளார். 11

## சபை முதல்வராக பிமல் ரத்நாயக்க!

கொழும்பு, நவ. 20
அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாடாளுமன்றத்தில் சபை முதல்வராகச் செயற்படவுள்ளார். இவரின் தெரிவுக்கு அமைச்சரவையிலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. 11

## தொழிலதிபர் கிருபா நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், நவ. 20
பிரபல தொழிலதிபரும் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவருமான அழகசுந்தரம் கிருபாகரன் 11

## சித்த மருத்துவ பீடாதிபதியாக திருமதி விவியன் சத்தியசீலன்



யாழ்ப்பாணம், நவ. 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக சித்த வைத்தியக் கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை 11

## பிரசவத்துக்காகச் சேர்க்கப்பட்ட தாயும், சேயும் பரிதாபச் சாவு!

### மருத்துவத் தவறே காரணம் என உறவினர்கள் போராட்டம்!

மன்னார், நவ. 20
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் பிரசவத்துக்காகச் சேர்க்கப்பட்ட தாயும், தாயின் வயிற்றில் இருந்த சிசுவும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.
மன்னார், பட்டித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த வனஜா (வயது - 28) என்ற இளம் தாயும், அவருடைய வயிற்றில் இருந்த 11

## வாளுடன் அடாவடித்தனம்; இளைஞர் மடக்கிப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 20
சுழிபுரத்தில் வாளுடன் அட்டகாசம் புரிந்த இளைஞர், பொது 11

## இந்திய மீனவர்களை தடுப்பதில் உறுதி!

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 20
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடுத்து நிறுத்துவதில் நாம் உறுதியுடன் உள்ளோம் 11

## வல்லைவெளியில் விபத்து மூவருக்குக் கடும்காயம்

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ்ப்பாணம் - வல்லைவெளிச் சந்திக்கு அண்மையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்ற ஓட்டோவும், நெல்லியடியில் இருந்து யாழ்ப் 11

## வன்னி மாவட்டத்துக்கு மேலும் ஒரு எம்.பி.!



வவுனியா, நவ. 20
வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக மேலும் ஒரு தேசியபட்டியல் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது.
அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பை உருவாக்க ஆதரவு!

## ஐ.மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 20**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி கதைப்பதற்கான தருணம் இதுவல்ல. எனவே, வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் புதிய அரச மைப்பை இயற்றுவதற்குரிய பணிகளை தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஆதரவு வழங்கப்படும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.**


இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் களுத்துறை மாவட்டத்தில் களமிறங்கி வெற்றிபெற்றுள்ள சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவிக்கையில்,

நாட்டுக்கு புதியதொரு அரசமைப்பு அவசியம். நாடாளுமன்றத்தில் இதனைச் செய்வதற்குரிய மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் தேசிய மக்கள் சக்திக்குக் கிட்டியுள்ளது.

அதேபோல வடக்கையும், கிழக்கையும், மலையகத்தையும்கூட பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக தேசிய மக்கள் சக்தி மாறியுள்ளது. மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் அந்தக் கட்சியில் உள்ளனர்.

புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழியை தேசிய மக்கள் சக்தி கொண்டுவர வேண்டும்.

அதற்குரிய ஆதரவை நாம் வழங்குவோம் - என்றார். (ச-44)



# மஹிந்த ராஜபக்ச முன்மாதிரித் தலைவர்

## ரோஹித புகழாரம்

கொழும்பு, நவ.20

மஹிந்த ராஜபக்ச என்பவர் அனைவருக்கும் முன்மாதிரியான தலைவர் என்று ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த அணியை கைவிட்டு ரணில் பக்கம் தாவிய முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்த பின்னர் ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ச எமக்கு தந்தைபோல் பலமாக இருப்பவர். மஹிந்த ராஜபக்ச அனைவருக்கும் முன்மாதிரியான தலைவர். எனவே, நாம் எதிரணியில் இருந்து எமக்குரிய பொறுப்பை நிறைவேற்றுவோம் என்றும் குறிப்பிட்டார்..

இதேவேளை, பொதுத்தேர்தலில் ரோஹித அபேகுணவர்த்தன, களுத்துறை மாவட்டத்தில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-44)

# மலையக மக்களை மேம்படுத்துவோம்

## அமைச்சர் சமந்த தெரிவிப்பு


கொழும்பு, நவ. 20

பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான சிறந்த திட்டங்களைச் செயற்படுத்துவோம் எனப் பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மீது பெருந்தோட்ட மக்கள் அதீத நம்பிக்கை கொண்டுள்ளார்கள். தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறுவதற்கும் பெருந்தோட்ட மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எமது ஆட்சியில் தீர்வு காணப்படும் - என்றார். (ச-இ)



# பொலிஸ் அதிகாரிகள் இவ்வாரம் இடமாற்றம்

கொழும்பு, நவ. 20

பொலிஸ் உயர் அதிகாரிகள் பலர் இந்த வார இறுதிக்குள் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் முதல் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் வரையிலான பதவி நிலைகளை வகிக்கும் அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இடமாற்றம் செய்யப்படவுள்ள அதிகாரிகள் தொடர்பிலான பட்டியல் பொதுப் பாதுகாப்பு அமைச்சினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு இன்று தீர்மானம் எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட அதிகாரிகள், மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் கடமையாற்றிய அதிகாரிகள், வினைத்திறன் இன்றி செயற்படும் அதிகாரிகள் ஆகியோரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். (ச-இ)

# சபாநாயகராக நிஹால் கலப்பதி





கொழும்பு, நவ. 20

10 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி நியமிக்கப்படவுள்ளார்.

புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நாளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாகின்றது. நாடாளுமன்ற செயலாளரின் அறிவித்தல்களின் பின்னர், முதலாவது நடவடிக்கையாக சபாநாயகர் தெரிவு இடம்பெறும்.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை தேசிய மக்கள் சக்தி பெற்றிருப்பதால் சபாநாயகர் பதவிக்குப் போட்டி நிலவாது என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிலவேளை எதிரணித் தரப்பில் சபாநாயகர் வேட்பாளர் ஒருவர் முன்மொழியப்பட்டால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்வு இடம்பெறும்.

பிரதி சபாநாயகர் பதவி சிறுபான்மையினத்தை சேர்ந்த ஒருவருக்கு அல்லது பெண்ணொருவருக்கு வழங்கப்படவுள்ளது. (ச-44)

# முதலாவது அமர்வு எளிமையாக நடக்கும்

## நாடாளுமன்ற செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 20

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வை எளிமையான முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நாளை முற்பகல் 10 மணிக்கு முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இந்தநிலையில், 10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வை எளிமையான முறையில் நடத்துமாறு ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். (ச-இ)

# நாடாளுமன்றம் வர ரணில் முயற்சி

கொழும்பு, நவ. 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடாளுமன்றத்திற்குப் பிரவேசிக்க தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத்தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி வெற்றிபெற்ற தேசியப்பட்டியல் ஆசனத்தின் ஊடாகவே அவர் நாடாளுமன்றத்துக்குப் பிரவேசிக்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, கட்சியின் இரண்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட இருவரில் ஒருவர் இராஜினாமா செய்ய உள்ளார் எனவும் பின்னர் அந்த வெற்றிடத்துக்கு வேறு ஒருவரை நியமிப்பதற்கு சட்டத்தில் தடை இல்லை என்பதால் அந்த இடத்துக்கு ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை நிராகரிப்பதற்கே தே.ம.சக்திக்கு மக்கள் ஆணை!

தயாசிறி தெரிவிப்பு

குருநாகல், நவ.20

**தேசிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப்பெற்றுள்ள மக்கள் ஆணையினூடாக இன வாதம் மற்றும் சந்தர்ப்பவாத அரசியலும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இப்படி யானதொரு ஆணை எந்தவொரு கட்சிக்கும் கிடைக்கப்பெறவில்லை.**

-இவ்வாறு பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் வெற்றிபெற்ற தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சியொன்றுக்கு வடக்கில் கிடைக்கப்பெற்றுள்ள வெற்றியானது விசேட அம்சமாகும். கட்சிகள் மற்றும் குழுக்களின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் இலக்கை நோக்கி பயணிப்பதற்குரிய தெளிவான ஆணையை மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளனர். அடுத்து தேசிய மக்கள் சக்தி எவ்வாறு செயற்படுகின்றது என்பதை ஆராயவேண்டும். அரசின் மக்கள் நலத்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

தவறான வழியில் சென்றால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் - என்றார். (ச-22-44)

மன்னார் இராணுவமுகாமில்

## 500க்கு மேற்பட்டோர் தனிமைப்படுத்தல்!

மன்னார், நவ, 20

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள பெரியமடு கொமாண்டோ இராணுவப் பயிற்சி முகாமில் 500க்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த இராணுவ முகாமில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் சிலர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர்கள் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இந்த நிலையில் பயிற்சி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு இராணுவத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ச-25, 56)

## பிரதி அமைச்சர்கள் நாளை நியமனம்

கொழும்பு, நவ.20

பிரதி அமைச்சர்கள் நியமனம் நாளை வியாழக்கிழமை மாலை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை நாடாளுமன்றம் கூடி ஆரம்ப நாளுக்குரிய விடயதானங்கள் நிறைவடைந்த பின்னர், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையுடன் சபை ஒத்திவைக்கப்படும்.

அதன்பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் மாலை பிரதி அமைச்சர்கள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர். பிரதி அமைச்சர்கள் எண்ணிக்கை 25 அல்லது சில வேளை 30 வரை அதிகரிக்கப்பட்டு இராஜாங்க அமைச்சுப் பதவி முறைமை இல்லாதொழிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-45-44)

## துயிலும் இல்லங்கள் வன்னியில் துப்புரவு

முல்லைத்தீவு, நவ,20

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் நாடு அமையப்பெற்றுள்ள நிலையில் இந்த மாதம் 27 ஆம் திகதி மாவீரர் நாளை நினைவிற்கொள்ள மக்கள் தயாராகி வருகின்றனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில், முள்ளியவளை, இரட்டைவாய்க்கால், இரணைப்பாலை ஆகிய பிரதேசங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். (ச-25,19)







## சூப்பர் சிங்கரில் யாழ்.சிறுமி

யாழ்ப்பாணம், நவ,20

பிரபல இந்திய தொலைக்காட்சியான விஜய் தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகும் 'சூப்பர் சிங்கர் ஜூனியர் 10' பாடல் போட்டி நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த சிந்துமயூரன் பிரியங்கா என்ற 11 வயதுச் சிறுமி உள்வாங்கப்படவுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசை நிகழ்வின் மூலம் முன்னணித் பாடகராக அறிமுகமானமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 27)

தே.மக்கள் சக்தி

## வன்னி தேசியப்பட்டியலில் உபாலி சமரசிங்க தெரிவு



வவுனியா, நவ.20

வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாகப் போட்டியிட்டு தோல்வியடைந்த வன்னி மாவட்ட அமைப்பாளரும், கட்சியின் நீண்டகால உறுப்பினருமான உபாலி சமரசிங்கவின் பெயர் தேசியப்பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

அதேவேளை உபாலி மற்றும் சத்தியலிங்கம் ஆகியோரின் தேசியப்பட்டியல் அங்கத்துவத்துடன் சேர்த்து வன்னி மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்வடைந்துள்ளது. (ச-25,110)



## புதினம் தெரியுமோ?

**எலக்சன் முடிஞ்சாலும், உந்த வீட்டுக்கட்சியின்ர சலசலப்பு மட்டும் ஓயிறமாதிரித் தெரியேலை. இப்ப லேட்டஸ்ட்டா அந்தக் கட்சியில கதைபடுற விசயம் 'சிறீதரன் மாகாணசபைத் தேர்தலில முதலமைச்சர் வேட்பாளரா நிக்கப்போறாராம். அவரின்ர எம்.பி. பதவிக்கு சுமந்திரன் வரப்போறாராம் எண்டதுதான். ஏனிந்தக் கதை திடீரெண்டு கிளம்பினது? அண்டைக்கு வவுனியாவில அரசியல் குழுக் கூட்டம் நடந்ததெல்லோ. அதில சுமந்திரனுக்குத்தான் தேசியப்பட்டியல் சீற்றைக் குடுக்கோணும் எண்டு சிலர் சொல்லேக்க, அதுக்கு சிறியர் எழும்பி 'அவர் கொஞ்சநாள் பொறுமையா இருந்தால், இன்னும் ஆறுமாதத்தில இந்தப் பதவி அவரின்ர மடியில தானா வந்துவிழும்' எண்டு சொல்லியிருக்கிறார். அதைத்தான் கட்சிக்காரர் பிடிச்சுவைச்சுக்கொண்டு ஆளுக்கொரு பொழிப்புரை சொல்லுகினம்.**

**ஏற்கனவே எலக்சன் ரைமில ஒரு கதை பரவலா அடிபட்டது. வேட்புமனுவில முதலில சிறியரின்ர பேரைப் போடவிடாமல் சுமந்திரன் கடுமையா எதிர்த்தவர். பிறகு திடீரெண்டு மனம் மாறி, சிறியரையே முதன்மைவேட்பாளராவும் போட ஓமெண்டவர். அதுக்கிடையில 'பொது வேட்பாளரை கட்சியின்ர முடிவை மீறி ஆதரிச்சது கடும்பிழை' எண்டு ஒழுக்காற்று விசாரணைக்கு கடிதமொண்டும் சிறியருக்கும் இன்னும் சிலருக்கும் அனுப்புப்பட்டது. அந்தக் கடிதத்தின்படி கட்சி விதியை மீறிட்டார் எண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, சிறியரை கட்சியில இருந்து தூக்கினால், அவருக்கு அடுத்ததா விருப்பு வாங்கின சுமந்திரன் தான் எம்.பி.யா வருவார். அதுதான் அவையின்ர திட்டமெண்டு ஒரு குரூப் எலக்சன் ரைமில சொல்லிக்கொண்டும், பேஸ்புக்கில எழுதிக்கொண்டும் திரிஞ்சது. ஆனால் எம்.பி.யா இருக்கிற ஒருத்தரை அப்பிடி எடுத்தம், கவிழ்த்தம் எண்டு நினைச்ச உடனையெல்லாம் நீக்க ஏலாது. இதை மனசில வைச்சுத்தான் சிறியர் ஆறுமாதத்தில அவருக்குப் பதவி மடியில போய் விழும் எண்டு சொன்னாரோ தெரியாது.**

**ஆனால் கனபேர் சிறியரின்ர ஆறுமாசக் கதைக்கு குடுத்த வியாக்கியானம், 'மாகாணசபை எலக்சனில சிறியர் முதலமைச்சர் வேட்பாளரா நிக்கப்போறார்' எண்டதுதான். அப்பிடி ஒரு ஆசை சிறியருக்கு முந்தி இருந்திருக்கலாம். ஆனால் இந்த பார்லிமெண்ட் எலக்சனோட சிறியருக்கு களநிலைவரம் வடிவா விளங்கியிருக்கும். இப்பவே கரணம் தப்பினால் மரணமெண்ட நிலையிலதான் வீட்டுக்கட்சி தப்பிப்பிழைச்சு ஒரு சீற்றையாவது எடுத்தது. எப்பிடியும் இனிமேல் வரப்போற எலக்சன்களில திசைகாட்டி அலை இன்னும் பெரிசாத்தான் அடிக்கும். அதால மாகாணசபையை வீட்டுக்கட்சி பிடிக்கிறதெண்டது கஷ்டம் தான். அதிலையும் திசைகாட்டிக்குத்தான் இனிச் சந்தர்ப்பம் கூட. அதால உந்த விஷப்பரீட்சையில இறங்கினால், இருக்கிற எம்,பி.பதவியும் இல்லாமல் சிறியர் வெறுங்கையோடதான் நிக்கோணும். அப்பிடி இருக்கிறதை விட்டிட்டு பறக்கிறதுக்கு சிறியர் ஆசைப்பட்டால் அதோட அவரின்ர அரசியல் வாழ்வும் இல்லாமல் போகவும் சான்ஸ் இருக்கு. அப்ப இப்பிடியொரு முடிவை அவர் எடுக்க மாட்டாரெண்டதுதான் உண்மை.**

**அப்பிடியெண்டால் அந்த ஆறுமாதக் கதையைநி ஏன் எடுத்தார்? அதுக்குப் பின்னால வேற ஏதும் பிளான் இருக்குமா? எண்ட கேள்வியள் தான் விடையில்லாமல் கிடக்குது.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.20
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 32 நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.
மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சைவப்புலவர் பிரசங்கபூஷணம் க.கைலநாதன் 'மாணிக்கவாசகரும் பிரார்த்தனைப்பத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவையும் ஆற்றுவார். இதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (45)



# டெங்கு ஒழிப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.20
கோப்பாய் பிரதேச மட்ட டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் கோப்பாய் பதில் சுகாதார மருத்துவ அதிகாரி, உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாகக் கிராம அலுவலர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், உரும்பிராய்ப் பிரதேச சபையின் உப அலுவலகப் பொறுப்பதிகாரி, கோப்பாய் உபபொலிஸ் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலர்கள், கிராமமட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-22-66)



# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.20
புத்தசாசனம், மத அலுவல்கள், கலாசார அமைச்சின் கீழ் செயற்படுகின்ற பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் 2025 ஆம் ஆண்டுக்கான திறன் அபிவிருத்திப் பாடநெறிகளாக கர்நாடக சங்கீதம், பரதம், சித்திரம், யோகாசனம், சிங்களம், மிருதங்கம், நாடகம், ஆங்கிலம் ஆகிய நெறிகளுக்கான தகுதியான வளவாளர்களாக இணைய விரும்புவோரை 'தி.சுகிர்தன் நிலையப் பொறுப்பதிகாரி, புற்றளை, புலோலி' எனும் முகவரிக்கு எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (45-10)

# மரக்கறிகள் விலை மும்மடங்கு உயர்வு

யாழ்ப்பாணம், நவ.20
சந்தையில் கிடைக்கும் மரக்கறிகளின் அளவு வெகுவாகக் குறைந்துள்ளதால் மீண்டும் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன. எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கும் என சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
காய்கறிகளின் மொத்த விலை உயர்வால், காய்கறி விற்பனையாளர்களும், இடைத்தரகர்களும், மொத்த விலையை விட, சில்லறை விலையை மும்மடங்கு உயர்த்தியுள்ளனர். (ச-45)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.20
யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஓய்வுநிலை கணிதபாட ஆசிரியர் அமரர். சரச்ரட்ணம் புலந்திரலிங்கம் நினைவாக நான்கு மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் புதிதாக உருவாக்கப்பட்ட தியான மண்டபத் திறப்பு விழா அதிபர் இ.சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நாளை வியாழக்கிழமை காலை 9.10 மணி தொடக்கம் மு.ப. 10.30 மணி வரை நடைபெறவுள்ளது.
நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி.தம்பாபிள்ளை குகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-45-66)

# 'ஏசியன்' நிறுவனப் பிரதிநிதிகள் மாவட்டச் செயலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,நவ.20
ஏசியன் பவுண்டேஷன் நிறுவனத்தின் பிரதிநிதிகள், யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனை யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.
இதன்போது ஏசியன் பவுண்டேஷன் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறுநடுத்தர முயற்சியாண்மைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. (ச-22-66)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலத்துக்குப் பயன் தரும் வகையில் முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரும்.

**மிதுனம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படவும் அதனால் உடல் அசதி உண்டாகவும் கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிப்பதால் சோர்வாக இருப்பீர்கள்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். அலுவலகத்தில் உங்கள் ஆலோசனையை அதிகாரிகள் ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**துலாம்** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து உதவி செய்வார் கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக பணியாளர்களின் உதவி கிடைப்பதால் உற்சாகமாகச் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் புதிய பொறுப்பு ஒன்றை ஏற்கவேண்டி வரும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தின் போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக வெளியூர்ப் பயணம் மேற் கொள்ள நேரிடும்.

**மீனம்:** எதிர்பாராத பணலாபம் உண்டாகும். கடன்க ளில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பக லுக்கு மேல் உறவினர்க ளின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தீர்வே முதல் தேவை


அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்திருக்கின்றது. முன்னைய அரசாங்கங்களுக்கு இல்லாத பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு வாக்குறுதியளித்த விடயங்களைத் தடையில்லாது நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றது. முதற்படியாக தேர்தல்காலத்தில் வாக்குறுதியளித்தபடி மிகக்குறைந்தவர்களுடன் - துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்களுடன் அமைச்சரவை உருவாக்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கது. ஆனால் அதைமட்டும் கொண்டு அனைத்தையும் தீர்மானித்துவிடமுடியாது. வடக்கு மாகாண சபை கடந்தகாலத்தில் அதிகம் கல்வி அறிவுகொண்ட - துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்களால் நிறைக்கப்பட்டிருந்தது. ஆனால் மக்களின் எதிர்பார்ப்பை அவர்களால் நிறைவுசெய்யமுடியாதிருந்தது. பிரச்சினைகளின் அடிநாதத்தைக் கண்டறிந்து - அவற்றுக்கான தீர்வுகளை வழங்கத் தவறியமையே வடக்கு மாகாணசபை மீதான மக்களின் அதிருப்திக்குக் காரணமாக இருந்தது. இப்போதுள்ள அநுரகுமார அரசாங்கமும் நாட்டிலுள்ள பிரச்சினைகளின் அடிநாதத்தைக் கண்டறிந்து தீர்க்கத் தவறினால் தோல்வியுற்ற அரசாங்கமாகவே மாறும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஆணிவேரான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் முன்னுள்ள ஒரு பெரும் சவாலாக இருக்கின்றது. அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்திருக்கும் இந்த அரசு, தமிழ் மக்களுக்கான தீர்வு நோக்கி இதயசுத்தியுடன் பயணிக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. வடக்கு - கிழக்கில் இருந்து கிடைத்த வாக்குகள் ஒற்றையாட்சிக்கான சமிக்ஞை என்று தவறாக அர்த்தம் கற்பித்து, தங்களின் தீர்மானங்களை தமிழ் மக்கள் மீது திணிக்க முயலாமல் - தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வை அநுரகுமார திஸாநாயக்க தலைமயிலான அரசு முன்வைக்க முயலவேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழ்த் தரப்புகளின் கருத்துகளை உள்வாங்கி - தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பரவலாக்கத்தை உள்ளீர்க்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அது நடைபெற்றால் மட்டுமே இலங்கை அனைத்து நெருக்கடிகளில் இருந்தும் மீண்டெழமுடியும். நாட்டில் இனப்பிரச்சினை உள்ளது என்ற உண்மையை இந்த அரசாங்கமும் புறக்கணித்துச் செயற்படுமானால் - எதிர்காலத்தில் தமிழ் மக்கள் மட்டுமல்ல முழுநாடுமே அதன் தாக்கங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

கடந்காலங்களில் ஆட்சிக்கு வந்தவர்களால் ஏற்பட்ட ஏமாற்றங்களே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் வாக்குகளாக மாறியிருக்கின்றன. அந்த ஏமாற்றங்களைத் தொடரக்கூடாது என்ற மக்களின் எதிர்பார்ப்பைப் புரிந்துகொண்டு தற்போதைய அரசாங்கம் செயற்படுமானால் நாட்டின் எதிர்காலம் பிரகாசிக்கும். ஆனால் தங்களுக்குக் கிடைத்திருக்கும் அதீத பலத்தால் - அதிகாரத்தால் - இறுமாப்புடன் - நாட்டில் இனப்பிரச்சினை உள்ளதென்பதை மறந்து செயற்படுமானால் கடந்தகால அரசாங்கங்களுக்கு ஏற்பட்ட நிலைமையே அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்துக்கும் ஏற்படும்.






# அமைச்சரவையை கண்காணிக்கக் குழு

கொழும்பு, நவ. 20

ஊழல் மோசடிகள் இடம்பெறுவதனை தடுத்து நிறுத்தும் நோக்கில் புதிய அமைச்சரவையைக் கண்காணிப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

10 பேரைக்கொண்ட விசேட குழுவொன்றே நியமிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அமைச்சரவையின் திட்டங்கள் மற்றும் விலைமனுக் கோரல்கள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் காண்காணிக்கும் நோக்கில் இந்தக் குழு உருவாக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## பெரும்போக உரமானியம் முதற்கட்டப் பணி நிறைவு

*1.29 பில்லியன் ஒதுக்கீடு*

கொழும்பு, நவ. 20
விவசாயிகளுக்கு பெரும்போகத்துக்கு உர மானியங்களை வழங்குவதற்கான முதலாம் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
அதன்படி, 23 மாவட்டங்களுக்கு 86 ஆயிரத்து 162 ஹெக் ரேயர் பயிர்ச்செய்கைக்கு உர மானியம் வழங்கப்பட்டுள்ளது.
நாடளாவிய ரீதியில் ஒரு லட்சத்து 29,229 விவசாயிகளுக்கு சுமார் 1.29 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## டெங்கு அதிகரிப்பு

கொழும்பு, நவ.20
நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இதன்படி இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 44,000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 11,078 ஆகும். (ச-45-இ)

## ஈஸ்டர் தாக்குதல் இழப்பீட்டு விவரம் உயர்நீதிமன்றத்துக்கு

கொழும்பு, நவ. 20
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு வழங்குவது பற்றிய விவரம் 2025 பெப்ரவரி 27ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படை உரிமைமீறல் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது இழப்பீடு வழங்குவது பற்றிய விவரம் உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதோடு, 311 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்படவுள்ளது. (ச-45-6)



## ஒழுங்கமைப்பாளராக அஜித் பி பெரேரா?

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம ஒழுங்கமைப்பாளர் பதவிக்கு களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹயன கருணாதிலக மற்றும் தேசியப்பட்டியல் மூலம் நியமனம் பெற்றுக்கொண்ட சுஜீவ செனசிங்க ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அஜித் பி பெரேராதான் அந்தப்பதவிக்குப் பொருத்தமானவரென கட்சியின் தலைமைகள் அறிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-25, சி)

**நாளை**

**21.11.2024**

வியாழக்கிழமை - கார்த்திகை - 06

சுபநேரம் : 07.40 - 09.10

ராகுகாலம் : 01.40 - 03.10

**நாளொரு நல்வார்த்தை**

நாகரிகத்தின் வேர் காடுகள் தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்த மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன், ஒன்றாய் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது.

-இரவீந்திரநாத் தாகூர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகதின விழாவும் இதழ் வெளியீடும்

யாழ். இணுவில் இந்துக் கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழு நடத்தும் நூலகதினவிழாவும், இணுவை இந்துநாதம் இதழ்-8 வெளியீடும் அதிபர் வே.உதயமோகன் தலைமையில் இன்று புதன்கிழமை மு.ப. 11.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியை திருமதி தர்மதேவி மனோகரன், சிறப்பு விருந்தினராக இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளையின் நிறுவுநர் மு.புவீஸ்வரன், கௌரவ விருந்தினராக இணுவில் இந்துக் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய உறுப்பினர் வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-22-66)

## வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் இறைச்சிக்கடை, மீன்கடை பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் ஆகியனவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2025

01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான 12 மாத காலப்பகுதிக்கு பின்வரும் குத்தகைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் (தொ.பே.இல. 0242260914) பின்வரும் நிபந்தனைகளுடன் உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | குத்தகை விபரம் | நிரந்தர கொல்களம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை, வருடாந்த குத்தகை (ரூபா.) | மீளளிப்படும் வைப்பு (ரூபா.) | கேள்விப் படிவக்கட்டணம் (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | ஆண்டியாபுளியங்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 675,250.00 | 8000.00 | 1000.00 |
| 02 | பாவற்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 716,000.00 | 8000.00 | 1000.00 |
| 03 | செட்டிகுளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 301,000.00 | 8000.00 | 1000.00 |
| 04 | மாங்குளம் பொதுச் சந்தை | - | 120,436.36 | 8,000.00 | 1000.00 |
| 05 | மாங்குளம் மீன் கடை | - | 369,818.18 | 8,000.00 | 1000.00 |
| 06 | செட்டிகுளம் மீன் கடை | - | 117,600.00 | 8,000.00 | 1000.00 |
| 07 | அருவித்தோட்டம் சுற்றுலா மையம் | - | 15,636.36 | 5,000.00 | 1000.00 |
| 08 | சூடுவெந்தபுலவு மீன் கடை | - | 20,181.81 | 8,000.00 | 1000.00 |
| 09 | செட்டிகுளம் பொதுச்சந்தை | - | 54,545.45 | 8,000.00 | 1000.00 |
| 10 | செட்டிகுளம் பொதுமலசலகூடம் | - | 5,454.54 | 5,000.00 | 1000.00 |
| 11 | வேப்பங்குளம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | - | 24,545.45 | 8,000.00 | 1000.00 |

01. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் - 20.11.2024 – 26.11.2024 ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை
02. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 27.11.2024 ம் திகதி காலை 10.00 மணிவரை
03. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 27.11.2024ந் திகதி காலை 10.00 மணிக்கு
04. 27.11.2024 திகதி காலை 10.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
05. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் **பெயர், கடையின் பெயர்** என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு **செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ **உரிய நேரத்திற்கு முன்பதாக** கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
06. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.
07. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
08. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
09. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன். அவர் குத்தகை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் 27.11.2024**ல் இருந்து 07 நாட்களிற்குள்** 12 மாத குத்தகையின் 1/3 பங்கு வைப்புத் தொகையைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளர்க்கு பூரண அதிகாரம் உண்டு.
13. வருடத்தின் வழமையான போயா தினங்கள் மற்றும் வெசாக், பொசன் தினங்களில் இறைச்சி, மீன் கடைகள் மூடப்படுவதோடு அதற்காக குத்தகை கழிவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.
14. இறைச்சிக்கடை, மீன்கடை, பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் என்பன குத்தகைக்கு வழங்கப்பட்ட பின்னர் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தொடர்ந்து மூடிக்காணப்பட்டால் அந்நாட்களுக்குரிய தண்டப்பணம் அறவிடப்படும்.
15. கச்சேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கு அமைவாகவே மாட்டிறைச்சி, மீன் என்பன விற்பனை செய்யப்பட வேண்டும்.
16. குத்தகைக்கு எடுத்தவர் உப குத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
17. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
18. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு – கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.**

**செயலாளர்,**
**பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம்.**
**19.11.2024**

[illegible] (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**20.11.2024**



**மண்ணில்** 24.07.1942 — **விண்ணில்** 18.11.2016

## அமரர்
## கதிர்காமு கந்தையா தியாகராஜா

**(AD Secretary Cum Chief Clerk of Chavakacheri MPCS Ltd)**

மலையே இடிந்து வீழ்ந்தாலும் நிலையே சரிந்தாலும்
உங்கள் துணையுடன் கலங்காமல் நிமிர்ந்து நின்றோம்
மலையெனத் துன்பம் வந்து மனதினை நெருங்கும் போது
வலைத் தலைப்பட்ட மான் போல வருந்தாமல்
தாங்கள் காட்டிய பாதையில் தடம் மாறாமல் பயணிக்கின்றோம்.

**ஆண்டு எட்டில் சிரார்த்தம் செய்து அஞ்சலி செலுத்துகின்றோம் அப்பா!**

**இத்தியடி வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்**

(cs 1891) (N-1)

## வலிகாமம் மேற்கு, பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்
### 279 /1, யாழ்ப்பாணம் வீதி, வட்டாரம் - 03

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03, யாழ்ப்பாணம் வீதியிலுள்ள இல. 279/1 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதி வேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் **ஆதனத்தினை குமாரசிங்கம்** முருகானந்தம் ஆகியவர் குறித்த ஆதனம் பொன்னம்பலம் தம்பிராசா ஆகியவருக்கு சொந்தமாக இருந்தது என்றும், அவர் 1980 ஆம் ஆண்டளவில் குறித்த ஆதனத்தை தனக்கு அறுதியாக விற்றிருந்தார் என்றும், அன்றிலிருந்து தானே இவ்வாதனத்தின் உடைமையிலும் ஆட்சியிலும் இருந்து வருகின்றார் என்றும் குறித்த ஆதனம் தொடர்பில் தனது பெயரில் எழுதப்பட்ட அறுதி உறுதியோ மற்றும் முன்னுறுதிகளோ தன்னிடம் இல்லை என்றும், 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் போது குறித்த ஆதனம் தொடர்பான சகல ஆவணங்களும் தொலைந்துவிட்டன என்றும் குறித்த ஆதனம் தொடர்பான ஆவணங்களின் பிரதிகளைக் காணிப்பதிவகத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை என்றும், குறித்த ஆதனத்தை தானும் தனது முன்னுரித்தாளரும் 30 வருட காலத்துக்கும் மேற்பட்ட காலமாகத் தொடர்ச்சியாகவும், இடையூறற்றும், முறிவற்றும் மற்றும் ஏனைய சகலருக்கும் எதிராகவும் ஆட்சி செய்து வந்ததன் மூலம் ஆட்சியுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஆட்சியுரிமை பெற்று முழுமையான உரிமையையும் உரித்தையும் பெற்று விட்டதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு M.சசாங்கன் முகதாவில் 1028 / 15.12.2023 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**சிவநிதி சிவசுந்தரம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு M.சசாங்கன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1101 / 02.04.20215 ஆம் இலக்க உறுதியால் குறித்த **குமாரசிங்கம் முருகானந்தம்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சுப்பிரமணியம் மகள் ஹம்சதாருணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7663 / 01.02.2017 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சிவசுந்தரம் மகள் சிவநிதி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**குமாரசிங்கம் முருகானந்தம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10346 / 16.01.2024 ஆம் இலக்க உறுதியால் குறித்த சுப்பிரமணியம் மகள் ஹம்சதாருணி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**இராசரத்தினம் சாந்தன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10379 /19.02.2024 ஆம் இலக்க உறுதியால் குறித்த **குமாரசிங்கம் முருகானந்தம்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சாந்தன் சஞ்சு** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2791 / 25.09.2024 ஆம் இலக்க உறுதியால் குறித்த **இராசரத்தினம் சாந்தனும் பெண் ஜெயராணியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த சாந்தன் சஞ்சு ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பிதுள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சாந்தன் சஞ்சு** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு, பிரதேசசபை.**

(cs.29245) N-1)

## வவுனியா இ.போ.ச. சாலையில் கிரீஸ் மாயம்!

இலங்கைப் போக்குவரத்துச் சபை வவுனியா சாலையில் 18 கிலோ நிறையுடைய கிரீஸ் வாளி களவாடப்பட்டுள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த திருட்டுச் சம்வம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
(ச-25, 110)

# மாவீரர் நாளுக்கு தயாராகும் சம்பூர் - ஆலங்குளம்

கொழும்பு, நவ, 20
மாவீரர் தினத்தை (கார்த்திகை 27) முன்னிட்டு சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை குறித்த சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
இந்த சிரமதானப் பணியில் மாவீரர்களின் குடும்பத்தினர், முன்னாள் போராளிகள்,பொதுமக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
கடந்த வருடம் வடக்கு - கிழக்கில் நீதிமன்றத் தடையுத்தரவின் மூலம் மாவீரர் தினத்தைக் கடைப்பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்டிருந்த பிரதேசமாக இந்தப் பிரதேசம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வவு. பாடசாலையில் ஆசிரியர்மீது தாக்குதல்: கண்டித்துப் போராட்டம்

வவுனியா,நவ, 20
வவுனியா - வீரபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஈடுபட்டுள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது:-
கடந்த வாரம் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது இளைஞர் ஒருவர் ஆண் ஆசிரியர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, மாணவி ஒருவரிடம் பேச வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதற்கு ஆசிரியர் மறுப்புத் தெரிவித்த நிலையில் அதனால் ஏற்பட்ட முரண்பாட்டினால் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மூன்று இளைஞர்கள் செட்டிக்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்தநிலையில் ஆசிரியர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து சுகவீன விடுப்புப் போராட்டத்தில் குறித்த பாடசாலை ஆசிரியர்கள் ஈடுபட்டனர்.
(ச-25, 110, 18)


## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி மற்றும் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை - 2024 வேலைத்திட்டம்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை .மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(i)/(ii) and (iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணை 1.ல் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது. அட்டவணை 11.ல் குறிப்பிடப்பட்ட கேள்விக்கான தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 11 மற்றும் பகுதி III இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 20.11.2024ந் திகதியிலிருந்து 03.12.2024ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3.000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 04.12.2024ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அமையும் பிணைவைப்பு ஆவணத்தின் மூலப்பிரதி கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.11.28ந் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

அட்டவணை 1

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | மூத்ததம்பி வீதி புனரமைப்பு NP/14/41(16)/W/CF/2024/35 | 1.65மி | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 16,600.00 | 18.02.2024 |
| 02 | i.வைரவர் கோவில் கிளை ஒழுங்கை புனரமைப்பு,சண்டிலிப்பாய் ii.பாவட்டம் வீதி புனரமைப்பு,உயரப்புலம் iii.மைதான வீதி புனரமைப்பு,மானிப்பாய் Iv.யூனியன் மைதான வீதி,உயரப்புலம் - கட்டம் 11 NP/14/41(16)/W/CF/2024/36 | 3.68மி | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 36,800.00 | 03.04.2024 |
| 03 | i)கேளிமூலை வீதி புனரமைப்பு,கட்டுடை NP/14/41(16)/W/CF/2024/37 | 4.54 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 45,500.00 | 03.04.2024 |
| 05 | பத்துபனையடி வீதி புனரமைப்பு,பெரிய விளான் NP/14/41(16)/W/CF/2024/38 | 4.39 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 43,900.00 | 03.04.2024 |
| *06* | மாதகல் சந்தை திருத்தவேலை NP/14/41(16)/W/CF/2024/39 | *0.496* | *63 நாட்கள்* | *C9 and C8 (கட்டடம்)* | *49 நாட்கள்* | *4,960.00* | *18.02.2024* |
| *07* | செல்லமுத்து விளையாட்டு மைதான புனரமைப்பு NP/14/41(16)/W/CF/2024/40 | *0.427* | *63 நாட்கள்* | *C9 and C8 (கட்டடம்)* | *49 நாட்கள்* | *4,270.00* | *18.02.2024* |

அட்டவணை 11

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | ஒப்பந்த காலம் | கேள்விபிணை செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | கோரப்படும் செல்லுபடிக் காலம் |
| 01 | துருப்பிடிக்காத தண்ணீர்பவுசர் கொள்வனவும்,பொருத்துதலும் (Supplying and Fabrication Stainless Steel Water Bowser) NP/14/41(16)/W/PSDG/2024/41 | 30 நாட்கள் | 21.01,2025 | 15,000.00 | 30.01.2025 |

தலைவர்.
உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு.
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்.

(CR/43736) J-1

20.11.2024.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலுகைகள் மட்டுப்பாடு ஆராய்வதற்குக் குழு

கொழும்பு,நவ, 20
நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய கொடுப்பனவுகள், சலுகைகளைக் குறைப்பது பற்றித் தீர்மானிப்பதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் சலுகைகளைக் குறைப்பது பற்றிய இறுதித் தீர்மானம் ஆறு வாரங்களுக்குள் எடுக்கப்படும் என ஜனாதிபதி செயலக சட்ட ஆலோசகர் விஜயபண்டார தெரிவித்துள்ளார்.
உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சித்திரசிறி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் மாவட்ட முன்னாள் செயலர் புலுமுல்ல,அமைச்சு செயலர் திஸாநாயக்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.
(ச-6)

## நிறுவுநர் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் வித்தியாலய அதிபர் இராமசாமி சிறிதரன் தலைமையில் வித்தியாலயத்தின் திறந்தவெளி அரங்கில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி சூ.நோபேட் உதயகுமார், கௌரவ விருந்தினர்களாக வித்தியாலயத்தின் ஓய்வுநிலை ஆசிரியர்களான திருமதி றெஜினா இராஜ்குமார், திருமதி கோமளா தேவசுதன், வேல்முருகு சிவானந்தம், திருமதி சிலோனி தர்மராசா மற்றும் ஓய்வுநிலை அதிபர் கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
நினைவுப் பேருரையை திருமதி யசோதினி அருணகிரிநாதன் ஆற்றுவார்.
(ச-25)

# 8 வெளிநாட்டவர்கள் கட்டுநாயக்கவில் கைது

யாழ்ப்பாணம், நவ, 20

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த எட்டு பங்களாதேஷ் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கப் பகுதியிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் விசா இன்றி சிலர் தங்கி இருப்பதாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.


கைதானவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச-இ)

# கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

மன்னார், நவ.20

மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவுக்குட்பட்ட தள்ளாடிப் பகுதியில் கேரளக் கஞ்சாப் பொதியுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 4 கிலோ 315 கிராம் எடையுடைய கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ்.சந்திரபாலவின் பணிப்பில்,பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.



சி.பி.கேரதின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு தற்காலிக பொறுப்பதிகாரி உ.பொ.ப.பத்ம குமார, ரத்ன மணல தலைமையிலான அணியினரே இந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(ச-45-56)

**பனம் பொருள்சார் ஏற்றுமதியாளர்களுடனான**
**வருடாந்த கலந்துரையாடல் -2024**

இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் பனை சார் பொருட்களுக்கான ஏற்றுமதியாளர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 24.11.2024 அன்று யாழ்ப்பாணம் புங்கன் குளம் J Hotel மண்டபத்தில் பி.ப 2.00 மணிக்கு இடம்பெற உள்ளது. இக் கலந்துரையாடலில் ஏற்றுமதி யாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட உள்ளது.

எனவே இக் கலந்துரையாடலில் அனைத்துப் பனைசார் பொருட்களுக்கான ஏற்றுமதியாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு : மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றும் ஏற்றுமதியாளர்கள் பதிவுக் கட்டணமாக ஐந்தாயிரம் ரூபாவினை செலுத்தி தமது வருகையினை உறுதிப் படுத்திக்கொள்ளவும்.

**மேலதிக தகவல்களுக்கு**
**திரு. ப.தவமனோகரன் -0777426420**
**மின்னஞ்சல்: pdbmarketing@gmail.com**
**திரு. விநாயகமூர்த்தி சகாதேவன்,**
**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை,**
**இலங்கை.**

(CR/43739) J-1

# விற்பனைக்கு

1. யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும், 216 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகளும்,
2. யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட மூன்று கடைகளும்,
3. யாழ் கஸ்தூரியார் வீதியில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அண்மையில் 3 1/2 பரப்புக் காணியும்,
4. யாழ் K.K.S வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 20 அடி அகலமும் 120 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடையும்,
5. யாழ் கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் சுற்று மதிலுடன் கூடிய 3 பரப்பும் 3 குழியும் கூடிய காணியும்,
6. யாழ் பலாலி வீதியில் தபாற்பெட்டி சந்திக்கு அண்மையில் மக்கள் வங்கிக்கு அருகில் 4 பரப்புக் காணியும், வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

(CS/1894) J-1

தொடர்புக்கு:- 077 723 2535

# மரண அறிவித்தல்

தோற்றம்
01
03
1931



மறைவு
18
11
2024

## ஜோண் சின்னட்டி யேசுதாசன்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் தற்போது சென் பீற்றர்ஸ் ஒழுங்கை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் சின்னட்டி யேசுதாசன் நேற்றுமுன்தினம் (18.11.2024) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் சின்னட்டி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கிறிஸ்ரபெல் இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், ஏபிரகாம் விக்கிரமசேகரன் (ஓய்வுபெற்ற விவசாய காப்புறுதி முன்னாள் பிரதிபணிப்பாளர்), டானியல் விஜயசேகரன் (கனடா), மேரி இராஜமனோகரி (பிரான்ஸ்), இராஜசுந்தரி (ஆசிரியை - யாழ்ப்பாணக் கல்லூரி), ஜெயசித்திரா (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவனேந்தினி, சசிடீபிகா (கனடா), பிரபாகர் (பிரான்ஸ்), ரவீந்திரமோகன், சிறீதரன் (வைத்தியர் - போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்திகா, யதுர்சிகா, அக்ஷனன், அவிஷ்ணிகா, ஜினோ, ஜெனிவி, ஜொயல், ஜூலியா, அபிஷன், சுவேத்தா, பிரியங்கா, அர்ஜூன், சஞ்ஜெயன் ஆகியோரின் அன்புப் பேரனும், நவோமி, இஷாய் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.11.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல.4, சென்.பீற்றர்ஸ் லேன்,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/56705) N-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
077 327 6540, 076 966 2385

# மரண அறிவித்தல்

தோற்றம்
26
07
1955



மறைவு
19
11
2024

## வெள்ளைச்சாமி இராமகிருஷ்ணன்

கம்பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளைச்சாமி இராமகிஷ்ணன் நேற்று (19.11.2024) காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற வெள்ளைச்சாமி-கறுப்பாயி ஆகியோரின் அன்பு மகனும் காலம் சென்ற இராசையா (பாகவதர்). மாணிக்கம் அவர்களின் அன்பு மருமகனும் மங்களேஸ்வரி (மங்கை) அவர்களின் பாசமிகு கணவரும் ஜல்ராஜ் (பொலிஸ் உத்தியோகத்தர்), குகன்ராஜ், தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நாகநந்தினி, யதுஷா, தனுஷன் (இலங்கை போக்குவரத்து சபை நடத்துனர் -CTB Conductor) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வருண், கிர்த்திக், ரிஷிகன், காவியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். இவர் சாரதாதேவி, கௌரி காலம் சென்றவர்களாகிய தேவசிகாமணி, தில்லைநாதன், விஜயலட்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மூர்த்தி, சறோசினிதேவி, யோகேஸ்வரி, காலம் சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2024) வியாழக்கிழமை நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 680 9810. 077 843 0496**

(CS 1896) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் மாபெரும் நிதி நிறுவனத்திடமிருந்து உங்கள் நிலையான வைப்புக்களுக்கு மிக அதிகமான அனுகூலங்கள்

LOLC ஃபினான்ஸ் பிஎல்சி உங்களின் நிலையான வைப்புக்கு உயர் பிரதிபலன்களுடன், உச்ச பாதுகாப்பையும் வழங்குகிறது. LOLC ஃபினான்ஸ் பிஎல்சியுடன் நீங்களும் இன்றே முதலீடு செய்து பெருமளவு பலன்களை அனுபவியுங்கள்.

| காலம் | மாதாந்த | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் |
| 1 | 9.00% | 9.38% | | | 9.00% | 9.38% |
| 3 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.58% |
| 6 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.46% |
| 12 | 9.25% | 9.65% | 9.75% | 9.75% | 9.75% | 9.75% |
| 13 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.71% |
| 18 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.53% |
| 24 | 9.25% | 9.65% | 10.00% | 10.00% | 10.00% | 9.54% |
| 36 | 9.25% | 9.65% | 10.50% | 10.50% | 10.50% | 9.56% |
| 48 | 9.25% | 9.65% | 11.00% | 11.00% | 11.00% | 9.54% |
| 60 | 9.25% | 9.65% | 11.50% | 11.50% | 11.50% | 9.51% |

இந்த வட்டி வீதம் 2024/11/20 திகதிக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
*நிபந்தனை பொருந்தும்

0117 574 810
தொடர்புகளுக்கு: 0115 715 555 www.lolcfinance.com
LOLC பினான்ஸ்

# வடக்கு – கிழக்கின் மாற்றம் உள்நோக்கமற்றதாயின் மகிழ்வு

## உதய கம்மன்பில தெரிவிப்பு



**கொழும்பு, நவ.20**

**எவ்வித உள்நோக்கமும் இன்றி தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு, கிழக்கின் ஆதரவு கிடைக்கப்பெற்றிருந்தால் அது மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயம் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் கிடைக்கப்பெற்ற வெற்றியானது நாம் எதிர்பார்க்காத ஒன்றாகும். ஒரு புறம் அதிர்ச்சியளித்தாலும் மறுபுறம் மகிழ்ச்சியாகவுமுள்ளது. முழு நாடும் ஒன்றுபட்டுள்ளது. இதன் பின்னணியில் உள்நோக்கம் ஏதும் உள்ளதா என்பதைத் தற்போது புரிந்துகொள்ள முடியாது. இந்த மாற்றம் எப்படி நடந்தது என்பதையும் ஊகிக்கமுடியவில்லை.

உள்நோக்கம் எதுவுமின்றி இந்த மாற்றம் நிகழ்ந்திருக்குமாயின் அது மகிழ்ச்சி. அந்தக் கௌரவம் ஜனாதிபதியைச் சென்றடைய வேண்டும். அதேவேளை ஜனவரியில் உள்ளூராட்சிசபைத்தேர்தலை நடத்தும் நோக்கிலேயே வரவு - செலவுத் திட்டத்தை மார்ச்சில் முன்வைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது - என்றார். (ச-22-44)

# நம்பிக்கையை காப்பாற்றுவேன்

## சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ, 20

அடுத்து வரும் 5 வருடங்களும் எப்படி செயற்படுகின்றேன் என்பதை பார்ப்பீர்கள். என்மீது கட்சி வைத்த நம்பிக்கையை ஏற்று மக்களுக்கு முழுமையான எனது சேவையை அர்ப்பணிப்போடு செய்வேன்.

- இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் மாகாணசபை உறுப்பினராக இருந்தபோது பல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்திருந்தேன். இருந்தபோதும் ஏதோ ஒரு காரணத்துக்காக மக்கள் என்னை நிராகரித்தனர்.

வன்னி மாவட்டமானது திட்டமிட்ட இன அழிப்பு இடம்பெறுகின்ற ஒரு பிரதேசம். எனவே அதை உணர்ந்து செயற்படக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் தேவையை அறிந்து கட்சி இந்த ஆசனத்தை எனக்கு வழங்கியுள்ளது.

என்மீது கட்சி வைத்த நம்பிக்கையை ஏற்று இந்தப் பகுதி மக்களுக்கு முழுமையான எனது சேவையை அர்ப்பணிப்போடு செய்வேன்- என்றார். (ச-18)

# மாவீரர்தின நிகழ்வு வல்வெட்டியில் ஏற்பாடு!

யாழ்ப்பாணம், நவ.20

ஆண்டுதோறும் நவம்பர் 27 ஆம் திகதி தமிழ்த் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகம் உள்ளிட்ட புலம்பெயர் தேசங்களில் எழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இந்த ஆண்டுக்கான மாவீரர்நாள் நிகழ்வு வல்வெட்டித்துறை மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் தீருவில், வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளின் சதுக்கத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ச-22-100)

# மாணவிகள் துஷ்பிரயோகம் கணிதபாட ஆசிரியர் கைது



கொழும்பு, நவ, 20

இரு பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கணிதபாட ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் 54 வயதுடைய ஆசிரியர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பாடசாலையில் 5 ஆம் தரத்தில் கல்வி கற்கும் 10 வயதுடைய இரு மாணவிகளே பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# விஜித ஹேரத்துக்கு ஜெய்சங்கர் வாழ்த்து

கொழும்பு, நவ.20

வெளியுறவுத்துறை அமைச்சராக கடமையைப் பொறுப்பேற்றுள்ள விஜித ஹேரத்துக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தனது எக்ஸ் வலைத்தளத்தில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நட்புடன் வரலாற்று இணக்கப்பாட்டை மேம்படுத்துவதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும், இந்தியா - இலங்கை இடையிலான கூட்டணியைப் பலப்படுத்துவதற்கு தயாராகவுள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார். (ச-25, சி)

# அமைச்சரவைப் பேச்சாளராக மருத்துவர் நளிந்த

கொழும்பு, நவ, 20

புதிய அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளார். புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றபோதே அவர் நியமிக்கப்பட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலிகாமம் தெற்கில் டெங்கு களத்தரிசிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

டெங்கு நோயைத் தடுக்கும் முகமாக டெங்கு நோய்த் தடுப்புத் தொடர்பான வீட்டுத் தரிசிப்பு வலிகாமம் தெற்குப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. விசேட கழிவகற்றல் நடவடிக்கைகளுக்காக வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் கழிவகற்றல் வாகனமும் வருகை தரவுள்ளது.

இதன்போது டெங்குநோய் பரவலுக்கு ஏதுவாகவுள்ள கழிவுப் பொருள் வகைகளான பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள், கண்ணாடிப் போத்தல்கள், மூடிகள், சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், பியரின், தகரப் பேணிகள், சட்டிகள், பானைகள், பரல்கள், வயர்கள், தண்ணீர்ப் பரல்கள், சோடாப் போத்தல்கள், தயிர்ச் சட்டிகள், தகரங்கள், இரும்புகள், உலோகப் பாத்திரங்கள், நீர் தேங்கக் கூடிய பாவனையற்ற மின் உபகரணங்கள், பீலிகள், PVC குழாய்கள் மற்றும் ஏனைய நீர்தேங்கக் கூடிய கொள்கலன்கள் போன்றவற்றை வீட்டுக் குடியிருப்பாளர்கள் சேகரித்து வைக்க வேண்டும்.

சபை வாகனம் ஊடாக அவற்றை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் தெரிவித்துள்ளார். (ச-66)

## உயிராபத்தான நிலையில் கண்டாவளை பிரதான வீதி

### மக்கள் விசனம்

கிளிநொச்சி, நவ. 20

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டுள்ளதால் இந்த வீதியூடாக உயிராபத்தான நிலையிலேயே பயணிக்க நேரிடுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இதன்காரணமாக வீதியில் குழிகள், பள்ளங்கள் ஏற்பட்டுள்ளதால் வீதியைப் பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுகிறது. தற்போது மழைக்காலம் ஆரம்பமாகியதையடுத்து குழிகளில் வெள்ள நீர்தேங்கி நிரவிக் காணப்படுவதால் குறித்த வீதியூடாக உயிர் அச்சத்துடனேயே பயணிக்க நேரிடுகிறது.

எனவே இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து பாதுகாப்பான பயணத்துக்கு வழிசமைக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-10)

## பெண்ணைக் கொன்று தானும் உயிர்மாய்ப்பு

பெண் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்து, மற்றுமொரு பெண்ணை படுகாயமடையச் செய்த சந்தேகநபர் ஒருவர் தனது வீட்டுக்குச் சென்று தூக்கிட்டு உயிர் மாய்த்துக் கொண்டுள்ளார். இச்சம்பவம் மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்ணக் குளம் பகுதியில் பதிவாகியுள்ளது. 35 வயதுடைய பெண் ஒருவரும் 30 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ச-இ)

## கசிப்புடன் ஒருவர் அராலியில் கைது

யாழ்ப்பாணம்,நவ.20

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி தெற்குப் பகுதியில் 48 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் ஐந்து லீற்றர் கசிப்புடன் நேற்று செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-22-27)

# மரண அறிவித்தல்

## அமரர் திருமதி செல்லத்துரை மகேஸ்வரி



சங்கானையைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியில் வாழ்ந்தவரும் தற்போது தாவடியில் வசிப்பவரும் ஆகிய செல்லத்துரை மகேஸ்வரி அவர்கள் 19.11.2024 செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் (ஓய்வு நிலை அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகையா-கண்மணியின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையா-நாகம்மாவின் மருமகளும் சிவபாலன் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்), மகேஸ்வரன் (Engineer Australia), காலஞ்சென்ற அம்பிகைபாலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் உள்ளூராட்சித்திணைக்களம், முல்லைத்தீவு), சாரதாதேவி (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), கேதீஸ்வரன் (ஓய்வு பெற்ற தொழில்நுட்பவியலாளர், Northern Power Pvt, சுன்னாகம்), மகேந்திரன் (ஓய்வு பெற்ற மின்னத்தியட்சகர், கோண்டாவில்), இந்திராதேவி (Receptionist, Australia) ஆகியோரின் அன்புத் தாயாரும், லலிதகுமாரி (சங்கீத ஆசிரியர்), கௌரி (Architecture, Australia), பிறேமநிதி (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், வலிகாம வலயம்), பாலசுப்பிரமணியம் (உத்தரவு பெற்ற நில அளவையாளர்), நளாயினி (ஆசிரியர் யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), பவானி, காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் (Engineer, Australia), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சர்வேஸ்வரன் (யா/ சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலை), சபேசன் (Research Leader Australia), பிரியதர்சினி (ஆசிரியர் . Australia), (சாரங்கன் (Engineer, London), சிவராம் (Engineer, Australia), அஞ்சனா (Administrator, Australia), பார்த்தீபன் Accountant, Australia), கல்பனா (Fund Account Manager, Australia), செந்தூரன் (Project manager, Australia) நிரோசனா (Actuary, Australia), கிருஷ்ணா (Director, Australia), துஸ்யந்தி (சித்த மருத்துவர், தாவடி) பிறேமபாலன் (வங்கி உத்தியோகத்தர், இலங்கை வங்கி மானிப்பாய்), மகிசாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சிந்துஜா (ஆசிரியர், யா/ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை), ஜனார்த்தனன் (விரிவுரையாளர், பொறியியல் பீடம் யாழ்பல்கலைக்கழகம்), கேதுஷா (Quality Tester, Codevita Pvt) . தனுசன் (மாணவன், SLIIT), காயத்திரி (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி), நிரஞ்சன் (வைத்தியர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), சுதர்சன் (Engineer, Australia), கீர்த்தனா (Engineer, Australia), அபிராமி (Optometrist, Australia) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திலக்ஷன், அபினயன், பிரித்திகா, அஸ்வின், அக்ஷரா, வினோயன், ஹன்சி, சஹாசன், நிவேஸ், நவின், கியாரா, தியான், சிறிஹர்சினி, சிறிஹர்சிதா, டன்வந் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.11.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 02.11.1931 இறப்பு 19.11.2024

இல 18, பாடசாலை வீதி
தாவடி.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 1895) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரிக்கப்படாத...

சீனத்தூதுவர் ஷி ஷென்கொங் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ஷி ஷென்கொங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண மக்களின் மனங்களில் இடம்பிடித்த முதலாவது தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. அவருடைய வெற்றி நிச்சயம் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று நம்புகின்றேன்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என எல்லோரும் வேறுபாடுகளைக் கடந்து இலங்கையர்களாக வாழ்வதற்கு சீனா ஒத்துழைப்புகளை வழங்கும். நான் பருத்தித்துறை முனைக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு வாக்கியம் எழுதப்பட்டிருந்தது. 'பன்மைத்துவத்தில் ஒற்றுமையை நிலைநாட்டுதல்' என்பதே அது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அது இயல்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒளிமயமான எதிர்காலத்தின் ஆரம்பம் அது.

வடமாகாணத்தில் வாழ்கின்ற எம் சகோதர சகோதரிகளின் வாழ்வியல் எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்வதே எனது வருகையின் நோக்கமாகும். வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சீனா தன்னாலான ஒத்துழைப்புகளை முழுமையாக வழங்கும் - என்றார். (அ-ம-100-125)

## இடதுசாரி...

வைத்து சீனத்தூதுவர் ஷி ஷென் கொங் நேற்றுத் தெரிவித்தார்.

சீனா ஓர் இடதுசாரித்துவ கொள்கையுடைய நாடு. இலங்கையில் தற்போது ஆட்சியமைத்துள்ள அரசாங்கமும் இடதுசாரித்துவ அரசாங்கமாகத்தான் காணப்படுகின்றது. எனவே, இது தொடர்பில் சீனாவின் பார்வை என்ன? என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கே, சீனத்தூதுவர் இவ்வாறு பதில் வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை சீனாவிடையே பாரம்பரிய நட்பு உள்ளது. இதனடிப்படையில் இலங்கை அரசாங்கம் எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் சீனா உடன் இருக்கும். 'இலங்கை எமக்கு நெருக்கமான நட்புநாடு' என்பது மட்டுமே எங்களின் கொள்கை.

இலங்கைக்குக் கொரோனாப் பெருந் தொற்றின்போது நாம் மிக அதிகளவான தடுப்பூசிகளை வழங்கினோம். இலங்கையுடனான கடன்களை நாம் மறுசீரமைப்புச் செய்துள்ளோம். இவையெல்லாம் வேறு அரசாங்கங்களின் ஆட்சியில்தான் செய்தோம். இலங்கையுடன் நட்பாக இருப்பதே பிரதானம் - என்றார். (அ-ம-100-125)

## இந்தியா...

நாடுகளுக்கும் இடையிலான உறவு பலப்படுவதையும், பொருளாதாரப் பரிமாற்றம் மேம்படுவதையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி அநுர டிசெம்பர் மாதத்தின் நடுப் பகுதியில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். அதை நாம் வரவேற்கின்றோம். அதன் பின்னர் பொருத்தமானதொரு நேரத்தில் அவர் சீனாவுக்கு வருவார் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ-ம-100-125)

## தொழிலதிபர்...

(வயது-48) காலமானார். உடல் நலக்குறைவு காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நல்லூர்த் தொகுதி அமைப்பாளரான அவர், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார். பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களுக்குப் பல்வேறுபட்ட உதவித்திட்டங்களை அவர் முன்னெடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-20)

## யாழ்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய உலகில் கல்வி ரீதியிலான இருதரப்புப் பரிமாற்றங்கள் முக்கியமானவை. சீனா, இலங்கைக்கு அதிகூடிய வாய்ப்புகளை வழங்கி வருகின்றது. எனக்குத் தெரிந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும், சீனப் பல்கலைக் கழகத்துக்கும் கல்விசார் தொடர்புகள் தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கின்றன. எனினும், சில செயற்றிட்டங்களுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரை நாம் தொடர்புகொண்டால் எமக்கு உரிய பதில்கள் கிடைப்பதில்லை. அது ஏன்? என்றும் புரியவில்லை - என்றார். (அ-ம-100-125)

## பிரசவத்துக்காகச்...

சிசுவுமே உயிரிழந்துள்ளனர். தனக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவதாகவும், எனவே சிசேரியன் முறையில் குழந்தையை எடுக்குமாறும் அந்தப் பெண் கோரியுள்ளார். எனினும், இயற்கையான முறையில் பிரசவிக்க முற்பட்டபோதே அந்தக் கர்ப்பிணித் தாயும் சிசுவும் உயிரிழந்துள்ளனர் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தாயும், சிசுவும் உயிரிழந்த விடயத்தை நீண்டநேரமாக உறவினர்களிடம் மருத்துவமனை தெரியப்படுத்தவில்லை. அத்துடன், உயிரிழந்த பெண்ணின் சடலத்தைப் பார்க்கக்கூட நீண்டநேரமாக அனுமதிக்கவில்லை. எனவே இந்த இறப்புகளுக்கு நீதி கிடைக்காமல் நாம் சடலத்தைப் பொறுப்பேற்கப் போவதில்லை என்று உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளதுடன், அவர்கள் மருத்துவமனையில் நேற்றுப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதற்கு முன்னரும் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் இவ்வாறான இரு இறப்புகள் சம்பவித்திருந்தன. மூன்றாவது சம்பவமாக இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110-26)

## வாளுடன்...

மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சுழிபுரம், பாண்டவட்டைப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இளைஞரைக் கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-27)

## இந்திய...

என்று கடற்றொழில், நீர்வள மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சராக ஜனாதிபதி அநுரவால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்ட அவர், நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடியிலும், சட்டவிரோத உபகரணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் மீன்பிடியிலும் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எமது மீனவர்களின் பிரச்சினைகளை நாம் அறிவோம். எனவே, அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அத்தனை நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம் - என்றார். (அ-ம-44)

## சபை...

அத்துடன், ஆளுங்கட்சி பிரதம கொறடாவாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்படவுள்ளார். அதேவேளை, எதிரணி பிரதம கொறடா பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்திக்குள் போட்டி நிலவுகின்றது.

கயந்த கருணாதிலக்க, அஜித் பி பெரேரா மற்றும் தேசியப் பட்டியல் ஊடாக சபைக்கு வரவுள்ள சுஜீவ சேனசிங்க ஆகியோரில் ஒருவர் எதிரணியின் பிரதம கொறடாவாக வர வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. (அ-ம-44)

## சித்த...

காலமும் சித்த மருத்துவ அலகாகச் செயற்பட்டு வந்த சித்த மருத்துவ கற்கை அலகு கடந்த ஜூலை 26ஆம் திகதி பீடமாகத் தரமுயர்த்தப்பட்டது. இந்தப் பீடத்துக்கான பீடாபதி தெரிவு, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சித்த மருத்துவ பீடச்சபை கூட்டத்தில் இடம்பெற்றது. இதன்போதே 6 மேலதிக வாக்குகளைப் பெற்று கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சித்த மருத்துவ பீடத்தில் நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவம், மனித உயிரியல், சமூகநல மருத்துவம், சிரோரோகமும் அறுவை மருத்துவமும், நோய் நாடல் சிகிச்சை, குணபாடம், மூலதத்துவம் ஆகிய கற்றல் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ அலகு பீடமாகத் தரமுயர்த்தப்பட்ட நாளில் இருந்து முன்னாள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பதில் பீடாதிபதியாகச் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-ம-20-26-125)

## வன்னி...

இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரான முஹம்மது இஸ்மாயில் முத்துமுஹம்மது என்பவருக்கே குறித்த தேசியப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறை பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்டு ஓர் ஆசனத்தைப் பெற்றுக் கொண்டதுடன், வன்னி உட்பட ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது. அதனால், ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப்பெற்ற ஐந்து தேசியப்பட்டியல் ஆசனங்களில் ஒன்றை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு வழங்க நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முக்கியஸ்தருமான முஹம்மது இஸ்மாயில் முத்துமுகமது என்பவருக்கு குறித்த பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இவரது நியமனத்துடன் வன்னி மாவட்டம் 9 நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## வல்லைவெளியில்...

பாணம் நோக்கிவந்த சிறிய ரக வாகனமும் மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. ஓட்டோவில் பயணித்த இருவரும், வாகனத்தில் பயணித்த ஒருவருமே காயமடைந்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெ. ஏவுகணையைப் பயன்படுத்தினால்

# உக்ரைன் மீது நிச்சயம் அணுவாயுதத் தாக்குதல்



மொஸ்கோ, நவ. 20

**அமெரிக்கா வழங்கிய நீண்டதூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில், உக்ரைன் மீது அணுவாயுதத் தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.**

ரஷ்யா - உக்ரைன் இடையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஆரம்பித்த போர், தற்போது ஆயிரம் நாள்களை நிறைவு செய்யவுள்ளது. இந்தப் போருக்காக இதுவரை பலநூறு பில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ உதவிகளை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கியுள்ளது. எனினும், ரஷ்ய எல்லைக்குள் அவற்றைப் பயன்படுத்தத்தடைவிதித்திருந்தது. தற்காப்புக்காக மட்டுமே அந்த ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்பதே அமெரிக்காவின் நிபந்தனையாக இருந்தது.

ஆனால், அமெரிக்க அதிபர் பைடன் முதல்முறையாக அமெரிக்க ஆயுதங்களை ரஷ்ய எல்லைக்குள் பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளார். இதையடுத்தே, அமெரிக்கா வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில், உக்ரைன் மீது அணுவாயுதத் தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

அணுவாயுத வல்லமை கொண்ட நாட்டின் ஆயுதங்களால் ரஷ்யா தாக்கப்படும் பட்சத்தில், பதிலுக்கு அணுவாயுதங்களால் பதிலடி கொடுக்கும் வகையில், ரஷ்யாவின் அணுவாயுத் தாக்குதல் கொள்கை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. புதிய கொள்கைப் பிரகடனத்தில் புடின் கையொப்பமும் இட்டுள்ளார். எனவே, இன்றுமுதல் வெறும் ஒரு தொலைபேசி உத்தரவின் கீழ் உக்ரைன் மீது அணுவாயுதத் தாக்குதல் நடத்தும் அதிகாரம் புடினுக்கும் ரஷ்ய இராணுவத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. (ம)

# சீனாவை எதிர்த்தோருக்கு ஹொங்கொங்கில் சிறை!

ஹொங்கொங், நவ. 20

சீனாவுக்கு எதிராகவும், ஹொங்கொங்கின் சுதந்திரத்தை வலியுறுத்தியும் போராடியவர்களுக்கு அங்கு 10ஆண்டுகள்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. தாய்வானைப்போன்று ஹொங்கொங்கையும் சீனா தனது பிடியில் வைத்திருக்கத் தொடர்ந்து முயற்சித்து வருகின்றது. இதன்படி, சீனாவுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் ஹொங்கொங்கில் கைது செய்யப்பட்டால், அவர்களுக்கு 7 ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத் தண்டனையையும், சீனாவுக்கு நாடுகடத்தி சீனாவின் சிறைச்சாலைகளில் சிறையிடும் திட்டங்களையும் அண்மையில் சீனா அறிமுகப்படுத்தியது.

இந்தச் சட்டங்களைக் ஹொங்கொங்கில் நடைமுறைப்படுத்தக்கூடாது என்றும், சீனாவின் ஆதிக்கத்துக்கு உட்படாத சுதந்திர ஹொங்கொங்கை வலியுறுத்திப் போராடிய 45 பேருக்கே தற்போது அங்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் என 45 பேருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹொங்கொங்கின் ஜனநாயகத்துக்கும், அதன் விடுதலைக்கும் விழுந்த கடினமாக தாக்குதல் என்றும் இந்தத் தீர்ப்பு விமர்சிக்கப்பட்டுள்ளது. (ம)

## வேலையாட்கள் தேவை

வவுனியா, விசுவமடு ஆகிய இடங்களில்
வீட்டு வேலை, தோட்டவேலை
தங்கியிருந்து செய்வதற்கு பெண், ஆண்
வேலையாட்கள் தேவை.
சம்பளம் - 70000/-
S.குலம்: 070 252 5558
(CS/56710) J-1

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 20

மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, இன்று பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் பா.பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.ரவீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக பழைய மாணவியும், பொறியியலாளருமான திருமதி நி.சுபாங்கன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

# ஊடகவியலாளர் றஞ்சன் நேற்றுக் காலமானார்!



கிளிநொச்சி, நவ. 20

ஊடகவியலாளர் றஞ்சன் நேற்றுக் காலமானார்.

திடீர் சுகவீனமுற்ற நிலையில், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர்நேற்றுமாலை காலமானார் என்று மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. (அ-ம)

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு
யாழ்மாவட்டத்தில் சகல வசதிகளுடன்
கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
074 010 6975

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட
பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு
பின்வரும் வேலையாட்கள் தேவை.
- சமையல் உதவியாளர்
- Waiter
- Delivery Boy

தொடர்பு :- 077 314 7580
(cs.56708) N 01

# மோதலில் 150 பேர் பலி

சூடானின் டார்ப் நகரில், பயங்கரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்றுவரும் மோதலில் 150க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. (ம)

# நாவலர் நினைவு நல்லூரில் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.20

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகசபை யின் ஏற்பாட்டில் சைவமும் தமிழும் காத்த நல்லைநகர் நாவலர் பெருமானின் நினைவு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை 23 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் திருமுறைப் பாராயணம், கூட்டுப் பிரார்த்தனை என்பன இடம்பெறும். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா "நாவலர் பெருமானின் வாழ்வும் வளமும்" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார். தொடர்ந்து மகேஸ்வரப் பூசை (அன்னதானம்) இடம்பெறும்.

(ச-22-66)

## வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி

V.K. RAJARATNAM
இல.200, கஸ்தூரியார் வீதியிலும்
வியாபித்துள்ளது. சகல விதமான
வீட்டுப்பாவனைப் பொருட்களையும்
இலத்திரனியல் பொருட்களையும் நியாய
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
V.K. RAJARATNAM
1C Stanly Raod, Jaffna.
(காட்சி அறை)
(cs56701) (N-1)

# ட்ரம்பின் வருகையால் 2 கோடி பேர் அச்சம்

வொஷிங்டன், நவ. 21

ட்ரம்ப் பதவியேற்றதும், சட்டவிரோத குடியேற்றங்களுக்கு எதிராக அவசரநிலை அறிவிக்கப்பட்டு, சுமார் 2 கோடி வரையிலான சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.